மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்குள்ளவர்களே, ரூ. 35,000 வசூல் செய்து அரசுக்குத் தந்திருக்கிறார்கள். இதே முயற்சியை அவர்களும் செய்யலாம்.

மதுரையில் பார்மஸிஸ்ட் பயிற்சி

*481 வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் D. பார்மஸி பயிற்சிக்கு ஆண்டுதோறும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனரா ?

(இ) ஆம் எனில், எம்முறையில் தேர்வு நடத்தப்படுகிறது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அங்கீகரிக்கப்பட்ட இந்தியப் பல்கலைக்கழகமொன்றின் பொது விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கொண்டுள்ள, பள்ளி இறுதித்தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் முழுமையாக தகுதியைக் கொண்டு, முறையாக அமைக்கப்பட்ட குழுவினால் பார்மஸி பயிற்சிக்கு நபர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். மேலும் இந்திய மருத்துவக் கழகத்தினால் ஒப்புக்கொள்ளப்பட்ட, மேற்படி தேர்வுகளுக்குச் சமமான வேறு தேர்வில் வெற்றி பெற்றவர்களும் கூட மேற்படி பயிற்சிக்கு தேர்வு செய்யப்படுவர். பள்ளி இறுதித் தேர்வில் தவறியவர்கள் அல்லது பள்ளி இறுதிப படிப்பினை முடித்தவர்கள் மேற்படி பயிற்சிக்குத் தேர்வு பெற தகுதியுடையவரல்லர்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இங்கு கேட்டிருக்கக்கூடிய கேள்வி D. பார்மஸியைப் பற்றி. டி. பார்மஸி சம்பந்தப்பட்ட தேர்வுக்கான இந்தக் தகுதிகளா ? அல்லது பி. பார்மஸி ரெசர்ச் பிரிவில் சேரக் கூடியவர்களுக்குத் தகுதி இதுவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கேள்வி தமிழிலே அமைந்திருக்கிறது. திரு. காவேரிமணியம் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். இது மதுரையில் அரசினர் மருத்துவக் கல்லூரியில் டி. பார்மஸி பயிற்சிக்கு என்று கேட்கப்பட்டிருப்பதால், பி. பார்மஸிக்கு என்று சொல்லப்படாத காரணத்தினால், டிப்ளமா இன் பார்மஸி என்று எடுத்துக் கொண்டு டிப்ளமோ பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஓராண்டு பயிற்சியாக இருக்கிற டி. பார்மஸியில் சேருகிறவர்கள் பிறகு பி. பார்மஸியில் சேருவதற்குத் தகுதி பெற்றிருக்கிறார்கள் என்று, நான் நினைவிலிருந்து சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த வகுப்பானது மதுரையிலும், சென்னையிலும் மட்டும்தான் இப்பொழுது இருக்கிறது. மதுரையில் ஆண்டுதோறும் எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறார்கள், சென்னையில் எத்தனை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்?

1973 மார்ச் 23]

அப்படி தேர்விலே வெற்றி பெற்ற மாணவர்களில் இன்னும் எத்தனை பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டிப்ளமா இன் பார்மஸி என்ற அந்தப் படிப்புக்கு 100 மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப் பட்டதாக இதிலே ஒரு குறிப்பு இருக்கிறது. இவர்கள், வேலை கிடைப்ப தில்லை என்று அதிகமாக புகார் சொல்வதில்லை. காரணம், சாதாரண மருத்துவமனைகளிலே உள்ள கம்பவுண்டர் என்ற வேலை இவர்களுக்கு எளிதாக கிடைக்கிறது என்று கருதுகிறேன். ஆனால், பி. பார்மஸி தகுதி உள்ளவர்களுக்கு அதிக வேலை கிடைக்கவில்லை என்பதால், அப்படி ஒரு குறை இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: சிலோனிலிருந்து பர்மாவிலிருந்து வந்தவர்களுக்கு ஏதாவது சலுகை இந்த கோர்சுக்கு கொடுக்கப்படிருக் கிறதா ? அப்படியிருந்தால் அந்த விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அப்படி ஒரு குறிப்பு இல்லை.

Ten seats are reserved for service candidates. என்று ஏற்கெனவே வேலை பார்ப்பவர்களுக்கும் இதிலே விண்ணப்பித்துக்கொள்ள வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. Sixteen seats are reserved for scheduled castes and scheduled tribes, 28 seats for backward classes and the remaining 46 seats for the general pool.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னையிலே இந்த பார்மஸிஸ்டு கோர்சஸ்-ஐ மூடிவிட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னையி லிருந்து எல்லாவற்றையும் மதுரைக்கு எடுத்துச் சென்று விட்டார்கள் என்பது உண்மையா ? ஏன் சென்னையிலே மூடப்பட்டது ? மீண்டும் சென்னையில் திறக்க உத்தேசிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்தக் கோர்சுகள் சில நேரங் களில் மூடி இருப்பது நல்லதாக இருக்கிறது. ஏனென்றால், மாணவர்கள் வேலை கிடைக்கவில்லை, படித்துத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டு, பிறகு வகுப்பு நடத்துங்கள் என்று சொல்கிறார்கள். மாணவர்கள் வகுப்புக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்கிற அளவுக்கு இடர்ப்பாடு ஏற்படக் கூடாது என்பது அரசாங்கத்தினுடைய கொள்கை. அப்படி, சில ஆண்டுகளுக்குமுன் எம். எஸ்ஸி. வகுப்புகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால், உள்ளபடியாக அந்த வகுப்பை நிறுத்தவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லை. சென்னை மருத்துவக் கல்லூரியை உயர்நிலை ஆராய்ச்சிக் கல்வி நிலையமாக உயர்த்த வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில் பட்டப் படிப்புக்கு முற்பட்ட வகுப்புகளில் அதிக மாணவர்கள் இருப்பது நல்லதல்ல என்று நிபுணர்கள் தெரிவித்தார்கள். அப்படிச் சொன்னதன் காரணமாக, கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் இந்தப் பயிற்சியளிக்கும் வகையில்

திட்டத்தை மாற்றியிருக்கிறோம். அதே நேரத்தில் வேலை நிறுத்தம் செய்வோம், தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலை கொடுக்காவிட்டால், என்று மாணவர்கள் சொன்னதனால் சென்ற ஆண்டு சென்னையிலே சேர்ப்பதை நிறுத்திவிட்டு மதுரையிலே சேர்த்தோம். இந்த ஆண்டு மாணவர்கள் அரசாங்கத்தை வற்புத்தி சில காரியங்கள் நடைபெற விரும்புவதால் இந்த ஆண்டு கூட சென்னையில் அந்த வகுப்பில் மாணவர்களைச் சேர்க்காமல் அடுத்த ஆண்டு சேர்ப்பது நல்லது என்பது அரசாங்கத்தினுடைய எண்ணம்.

திரு. கே. ஏ. வகாப்: பி. பார்மஸி, டி. பார்மஸி மாணவர்கள் சில தனிப்பட்ட மருந்தகங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். அவர்கள் அழைப்பிற்குப் போக இவர்கள் தயங்குகிறார்கள். அரசாங்க வேலையே வேண்டுமென்று கேட்கிறார்கள். தனிப்பட்டவர்களிடத்தில் வேலை பெற இவர்களுக்கு வசதிகளை செய்து அவர்களிடமே சேர்க்க அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, மருந்துக் கூடங்களிலே சேரக்கூடியவர்கள் டிப்ளமோ இன் பார்மஸி உள்ளவர்கள், மருந்து தயாரிப்பவர்கள் என்ற தகுதி பெற்றவர்கள், டிகிரி பெற்றவர்கள். அந்த மருந்து உற்பத்தி நிலையங்களில் ஏற்கெனவே உள்ள அகில இந்திய சட்டப்படி பி. எஸ்ஸி. கெமிஸ்ட்ரி உள்ளவர்களோ அல்லது வேறு விதமாக பட்டப் படிப்பு உள்ளவர்களோ நியமிக்கப்படலாம் என்ற நிலைமை இருக்கிறது. பி. எஸ்ஸி. பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 300 சம்பளம் என்றால், பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களுக்கு ரூ. 400 தர வேண்டியிருக்கிறது. நான் சொல்வதிலே சற்று தொகை வேறுபாடு இருக்கலாம். ஆகவே, பி. எஸ்ஸி.யையே எடுக்கிறார்கள். பி. எஸ்ஸி. பார்மஸி பட்டம் பெற்றவர்களை எல்லோரும் எடுத்துக்கொள்ளச் செய்ய வேண்டுமானால் மத்திய அரசு அந்தச் சட்டத்தை திருத்தி பி. பார்மஸி படித்த எல்லோருக்கும் வேலை வாய்ப்பு என்ற நிலையை உருவாக்கினால் இன்னும் கொஞ்சம் அதிகமாக மருந்து உற்பத்தி நிலையங்களில் அவர்களுக்கு வேலை கிடைக்கும். அப்பொழுது அந்தக் குறை நீங்கும். ஆனால், அரசாங்கம் அவர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கக்கூடிய வாய்ப்புகளை அண்மையிலே செய்திருக்கிறது.

Psychological Research Institute

*482 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state :—

(*a*) whether there are proposals under the consideration of the Government to set up any para-psychological research Institute in this State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்:

(அ) இல்லை.
(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.